


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 271 | 4 Pages | 29.4.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 271 | 4 பக்கங்கள் | 29.4.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து

விளக்கம்:

புறத்தில் குன்றிமணிப்போல் செம்மையானவராய் காணப்பட்டாராயினும் அகத்தில் குன்றிமணியின் மூக்குப்போல் கருத்திருப்பவர் உலகில் உணடு.

## பஹல்காமில் பயங்கரவாதிகள் தாக்குதல்: இந்தியாவுக்கு தேவையான உதவி வழங்க தயார் அமெரிக்கா உறுதி



வாஷிங்டன், ஏப்.29

இந்தியாவின் காஷ்மீர் மாநிலம் பஹல்காம் நகரில் கடந்த 22ந் தேதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் உள்பட 26 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். உலகையே உலுக்கிய இந்த பயங்கரவாத தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருப்பதாக மத்திய அரசு குற்றம்சாட்டி வருகிறது.

இதனையடுத்து இந்தியாவுக்கு ஆதரவாக உலக நாடுகள் பலவும் பாகிஸ்தானுக்கு கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. அதன்படி அமெரிக்க தேசிய புலனாய்வுத்துறை இயக்குனரும், இந்திய வம்சாவளியுமான காஷ் படேலும் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பஹல்காம் தாக்குதலில் பலியானவர்களுக்கு அமெரிக்க தேசிய புலனாய்வுத்துறை இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. இந்த விவகாரத்தில் இந்தியாவுக்கு தேவையான அனைத்து உதவியையும் வழங்க தயாராக இருப்பதாகவும், மேலும் பாகிஸ்தானுக்கு இந்தியா கொடுத்த பதிலடிக்கு பாராட்டு தெரிவிப்பதாகவும் எக்ஸ் தளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

## பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் கப்பல் எதிர்ப்பு ஏவுகணையை நிறுத்திய அமெரிக்கா



மணிலா, ஏப்.29

பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள தென்சீனக்கடல் பகுதி முழுமைக்கும் சீனா உரிமை கொண்டாடுகிறது. ஆனால் பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனேஉள்ளிட்ட நாடுகளும் அதற்கு உரிமை கோருகின்றன. இந்த விவகாரத்தால் அங்கு செல்லும் பிலிப்பைன்ஸ் படகுகள் மீது சீன கடற்படையினர் அவ்வப்போது தாக்குதல் நடத்துகின்றனர். இதனால் இரு நாடுகளுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்படுகிறது.

இதில் பிலிப்பைன்சுக்கு ஆதரவாக அமெரிக்கா களமிறங்கியது. அதன் ஒருபகுதியாக இரு நாடுகளும் பிலிப்பைன்சில் கூட்டுப்போர் பயிற்சியை நடத்தி வருகின்றன. இந்தநிலையில் அமெரிக்க ராணுவம் முதன்முறையாக கப்பல் எதிர்ப்பு ஏவுகணையை பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் நிறுத்தி உள்ளது. இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது.

## 54 பயங்கரவாதிகளை சுட்டுக்கொன்ற பாகிஸ்தான் ராணுவம்

பெஷாவர், ஏப்.29

அண்டை நாடான தலீபான்கள் ஆளும் ஆப்கானிஸ்தானில் இருந்து தங்கள் நாட்டிற்குள் ஊடுருவ முயன்ற 54 "பயங்கரவாதிகளை" சுட்டுக்கொன்றதாக பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள வடமேற்கு கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள வடக்கு வசிரிஸ்தான் அருகே நடந்தது. அங்கு அதிக எண்ணிக்கையிலான பயங்கரவாதிகள் ஆயுதங்களுடன் எல்லைக்குள் நேற்று இரவு ஊடுருவினர். அப்போது அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த பாகிஸ்தான் ராணுவத்தினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது.

இதில், 54 பயங்கரவாதிகளைச் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து, அந்தப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. கொல்லப்பட்டவர்கள் "குவாரிஜ்" என்று உளவுத்துறை அறிக்கைகள் குறிப்பிட்டுள்ளதாக பாகிஸ்தான் ராணுவத்தின் ஒரு அறிக்கை கூறுகிறது, இந்த சொல் பாகிஸ்தான் தலீபான்களை விவரிக்க பாகிஸ்தான் கூட்டாட்சி அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகிறது.

## இறந்த தந்தையின் உடலை அலமாரியில் 2 வருடங்களாக மறைத்து வைத்த மகன்.. அதிர்ந்த போலீசார்

டோக்கியோ, ஏப்.29

ஜப்பான் தலைநகர் டோக்கியோவை சேர்ந்த 56 வயதான நோபுஹிகோ சுசுகி என்பவர், சீன உணவகம் ஒன்றை நடத்தி வருகிறார். கடந்த ஒரு வாரமாக இவர் உணவகத்தை திறக்காமல் இருந்ததால் சந்தேகமடைந்த அக்கம் பக்கத்தினர், போலீசாருக்கு தகவல் அளித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், அவரது வீட்டில் சோதனை நடத்தினர். அப்போது அவரது வீட்டு அலமாரியில், எலும்புக்கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதுதொடர்பாக அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், வேலை முடிந்து திரும்பியபோது தனது 86 வயதான தந்தை வீட்டில் இறந்து கிடந்தார், ஆனால் எப்படி இறந்தார் என்று தெரியவில்லை. அவருக்கு இறுதிச் சடங்குகள் செய்வதற்கு அதிகளவு செலவாகும் என்பதால், அதை தவிர்ப்பதற்காக தந்தையின் உடலை அலமாரியில் மறைத்து வைத்ததாக அவர் தெரிவித்தார். இதனைக் கேட்டு போலீசார் அதிர்ச்சி அடைந்தனர். ஜப்பானில், இறுதிச்சடங்கு செய்வதற்கு 1.3 மில்லியன் யென் (இந்திய மதிப்பில் ரூ7.60 லட்சம்) ஆகும் என கூறப்படுகிறது. இதன் காரணமாகவே அவர் தனது தந்தையின் உடலை மறைத்து வைத்திருந்ததாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து போலீசார் கூறுகையில், "ஆரம்பத்தில் இந்த செயல்களுக்காக அவர் குற்ற உணர்ச்சியுடன் இருந்ததாகவும், பின்னர், இந்த நிலைக்கு தனது தந்தையே காரணம் என்று நம்பி நிம்மதியடைந்ததாகவும்" தெரிவித்தனர். இந்நிலையில் தனது தந்தையின் ஓய்வூதியத்தை 2 ஆண்டுகளாக பெற்றுவந்ததால், சந்தேகத்தின் அடிப்படையில் அவரை கைது செய்து போலீசார் விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக அங்குள்ள சமூக ஊடகங்களில், இந்த வழக்கு எதிர்வினைகளைத் தூண்டியுள்ளது. 56 வயதான அவர் கூடுதல் ஓய்வூதியத்தை வசூலிக்க தனது தந்தையைக் கொன்றதாக சிலர் கூறினாலும், ஒரு சிலர் அவருக்கு அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

# நெல்லை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 2 லட்சம் நிதியுதவி; முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை, ஏப்.29

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை டக்கரம்மாள்புரத்தை சேர்ந்த தனுஷ்லாஸ் தனது மனைவி, மகன், மருமகள், பேரக்குழந்தைகள் மொத்தம் 6 பேருடன் நேற்று மாலை காரில் நாகர்கோவிலுக்கு சென்றார்.

நெல்லை நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் வள்ளியூர் அருகே சென்றுகொண்டிருந்த போது எதிரே வந்த வந்த கார் தனுஷ்லாஸ் கார் மீது மோதியது. இந்த கோர விபத்தில் தனுஷ்லாஸ் உள்பட குடும்பத்தினர் 6 பேரும் உடல்நசுங்கி உயிரிழந்தனர். எதிரே வந்த காரில் இருந்த கூடங்குளத்தை சேர்ந்த மெல்கிஸ் (வயது 50) என்பவரும் உயிரிழந்தார். இந்த கார் விபத்தில் மொத்தம் 7 பேர் உயிரிழந்தனர். மேலும், 8 பேர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில், நெல்லை கார் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்ச ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 1 லட்சமும், சிறிய காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 50 ஆயிரமும் நிதியுதவி வழங்கப்படும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று சட்டசபையில் அறிவித்துள்ளார்.

## பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும் மதுரை ஆதீனம் பேட்டி



மதுரை, ஏப்.29

மதுரை தெற்கு ஆவணி மூல வீதியில் உள்ள மதுரை ஆதீன மடத்தில் தனியார் மருத்துவமனையுடன் இணைந்து சிறப்பு மருத்துவ முகாம் நேற்று நடந்தது. அதனை மதுரை ஆதீனம் ஹரிஹர ஞானசம்பந்த தேசிக சுவாமி தொடங்கி வைத்து அவரது உடல் எடை, ரத்த பரிசோதனை செய்து கொண்டார்.

பின்னர் மதுரை ஆதீனம் நிருபர்களிடம் கூறியதாவது:

மக்கள் அனைவரும் உடல் நலனை பாதுகாக்க வேண்டும். இலவச மருத்துவமனை அமைக்க திட்டமிட்டுள்ளேன். பாகிஸ்தானை தனிமைப்படுத்தி உலக நாடுகளுடன் எந்த தொடர்பையும் ஏற்படாத வண்ணம் செய்ய வேண்டும். வக்பு வாரிய சட்ட திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இன்றைக்கு மத தீவிர வாதத்தில் ஈடுபடுவது பாகிஸ்தான். அதனை தூண்டி விடுவது சீனா. செல்போனில் நல்ல கருத்துகளை பார்க்கவேண்டும், ஆனால் சினிமா மோகத்தால் கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இன்றைய தலைமுறையினர் சினிமா மோகத்தில் சிக்கியுள்ளனர்.

நடிகரும், த.வெ.க. தலைவருமான விஜய்யை பற்றி பேச விரும்பவில்லை. காஷ்மீர் விவகாரத்தில் தற்போதைய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி கொடுப்பார்கள்.

ஜவகர்லால் நேரு ஆட்சி காலத்தில் பல இடங்களை இழந்துள்ளோம். இந்த முறை சரியான பதில் அடி கொடுப்பார்கள். நல்லவராக இருப்பதைவிட வல்லவராக இருக்க வேண்டும். அந்த வகையில் நம்பர் ஒன் பிரதமராக மோடி உள்ளார். பாரத நாடு என்றைக்கும் சமாதானத்தைதான் விரும்புகிறது. ஆனால் தூங்குகின்ற புலியை இடறிவிட்டால் ஏற்படும் விளைவை பாகிஸ்தான் கட்டாயம் அனுபவிக்கும். இன்றைக்கு உலக நாடுகள் அனைத்தும் இந்தியாவுக்கு தான் ஆதரவாக நிற்கிறது. தீவிரவாதிகளை வளர்ப்பது பாகிஸ்தானில் தான். அவர்களை தூண்டி விடுவது சீனா தான். அவர்களுக்கு தண்ணீரை வழங்க கூடாது யார் கூறினாலும் சரி. மனிதாபிமானத்தின் படி தண்ணீர் தருவது சரி தான். ஆனால் அவர்களுக்கு மனிதாபிமானம் இல்லை. தீவிரவாதத்துக்கு எதிராக நதிநீரை நிறுத்துவது சரியானதுதான். அவர்கள் இந்தியர்களை சுட்டு வீழ்த்துகிறார்கள். பாகிஸ்தானுக்கு சரியான பதிலடி வழங்க வேண்டும். வாஜ்பாய் ஆட்சியின் போது கொடுத்த பதிலடியை போன்று இந்தமுறையும் பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## அரசியல் சாசனத்தை பா.ஜனதா சிதைத்து வருகிறது ப.சிதம்பரம் குற்றச்சாட்டு



சென்னை, ஏப்.29

சென்னை சத்தியமூர்த்தி பவனில் அம்பேத்கர் பிறந்தநாள் விழா நடைபெற்றது. விழாவில் முன்னாள் மத்திய மந்திரி ப.சிதம்பரம், அகில இந்திய காங்கிரஸ் வக்கீல் பிரிவு தலைவர் டாக்டர் அபிஷேக் மனு சிங்வி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

இதில் ப.சிதம்பரம் பேசியதாவது:

தேர்தலுக்கு முன்னால் 400 இடங்களை பெறப்போவதாக பா.ஜனதா சபதம் எடுத்தது. ஆனால் 400 இடங்களை மக்கள் பா.ஜனதாவுக்கு கொடுத்திருந்தால் அம்பேத்கர் இயற்றிய அரசியல் சாசனத்தை தகர்த்து எறிந்து இருப்பார்கள்.

ஆக்கிரமிப்பு என்ற பெயரில் புல்டோசர் வைத்து வீடுகளை இடிக்கிறார்களே, அதுபோல அரசியல் சாசனத்தை தூக்கி எறிந்து, சுக்கு நூறாக உடைத்து, 2வது குடியரசு என்றும், புதிய அரசியல் சாசனம் என்றும் நிச்சயமாக பா.ஜனதா செய்திருக்கும். அதில் எனக்கு ஒன்றும் சந்தேகமே கிடையாது. ஆனால் மக்கள் அவர்களுக்கு அருதிப்பெரும்பான்மை கிடைக்காமல் செய்து விட்டார்கள். எனினும், பா.ஜனதாவினர் தற்போது புல்டோசர் இல்லாமல் சுத்தியல், உளியை வைத்து அரசியல் சாசனத்தை சிதைத்து வருகிறார்கள்.

குடியுரிமை திருத்தச் சட்டம், வக்பு திருத்தச் சட்டம் ஆகியவை உளி வைத்து அரசியல் சாசனத்தை சிதைப்பதுதான். அது போல குடியேற்றம், தனிமனித உரிமைகள், கல்வி உரிமைகளை சிதைக்க தயாராக இருக்கிறார்கள். நின்று நிதானித்து சட்டம் இயற்றி வருகிறார்கள். எனவே, எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்

## விஜய்க்கு கூடும் கூட்டம் வாக்குகளாக மாறாது: கே.டி.ராஜேந்திரபாலாஜி பேட்டி



சிவகாசி, ஏப்.29

விருதுநகர் மாவட்டம் சிவகாசி மாநகராட்சிக்கு உட்பட்ட திருத்தங்கல் மண்டல பகுதியில் அ.தி.மு.க. பூத் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் கே.டி. ராஜேந்திரபாலாஜி நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழக வெற்றிக் கழக கட்சியின் பூத் கமிட்டி கூட்டம் கோவையில் நடந்தது. இந்த கூட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டதாக தகவல் வெளியாகி உள்ளது. இதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. நடிகர்களை பார்க்க எப்போதும் கூட்டம் கூடுவது வழக்கம். 9 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல் பிரசாரத்தின்போது தமிழகம் முழுவதும் நடிகர் வடிவேல் பிரசாரம் செய்தார்.

அப்போது அவரை பார்க்க ஏராளமான பொதுமக்கள் வந்தனர். ஆனால் வந்தவர்கள் வடிவேல் ஆதரவு கேட்ட வேட்பாளருக்கு ஓட்டு போடவில்லை. அந்த தேர்தலில் நான் 38 ஆயிரத்து 888 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன். அதேபோல் தான் நடிகர் விஜய்யை பார்க்க வரும் கூட்டம் வாக்குகளாக மாறாது. வருகிற சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வை வீழ்த்த வேண்டும் என்பதுதான் அ.தி.மு.க.வின் குறிக்கோள். எடப்பாடி பழனிசாமியின் தலைமையை ஏற்கும் யாருடனும் கூட்டணி அமைக்க அ.தி.மு.க. தயாராக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## பா.ஜ.க.வின் வளர்ச்சியை தடுக்கப் பார்க்கிறார்கள் நயினார் நாகேந்திரன்



சென்னை, ஏப்.29

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் சென்னையில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

சென்னை மெரினாவில் உள்ள நடுக்குப்பம் பகுதியில், பா.ஜ.க. சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட பிரதமர் மோடியின் "மனதின் குரல்" வானொலி நிகழ்ச்சி ஒளிபரப்புக்கு கடைசி நேரத்தில் அனுமதி தராமல் மக்களை அலைக்கழித்த தி.மு.க. அரசின் அதிகாரப்போக்கு நியாயமல்ல. தி.மு.க.வினர் நடத்தும் ஆர்ப்பாட்டங்களுக்கும், போராட்டங்களுக்கும் உடனடியாக அனுமதியும், போலீஸ் பாதுகாப்பும் கொடுக்கும் தி.மு.க. அரசு, மக்களோடு பிரதமர் மோடி கலந்துரையாடும் "மனதின் குரல்" நிகழ்ச்சிக்கு இத்தனை கெடுபிடிகளை விதிப்பது ஏற்புடையதல்ல.

சுமார் 1,000 மக்களுக்கு அறுசுவை விருந்துடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சிக்காக ஒரு வாரத்துக்கு முன்பாகவே தமிழக பா.ஜ.க. சார்பில் போலீசாரிடம் அனுமதி கடிதம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் நிகழ்ச்சி ஆரம்பிக்கப் போகும் இறுதி தருணத்தில் அனுமதி இல்லை என கூறி வேறொரு புதிய இடத்துக்கு மாற்றியது தி.மு.க. அரசின் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் நோக்கமே ஆகும்.

துணை முதல்அமைச்சர் தொகுதி என்பதால் அனுமதி மறுக்கப்பட்டதா? மக்கள் மனதில் மாற்றம் நிகழ்ந்து இருக்கிறது. ஆட்சி உங்களுக்கு மட்டும் நிரந்தரமானது அல்ல. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் நிகழும். பா.ஜ.க.வின் வளர்ச்சியை தடுக்கப் பார்க்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு: 9443699066

WHATSAPP CHENEL

DHINAKANI.COM

## சொத்து குவிப்பு வழக்கு: அமைச்சர் ஐ.பெரியசாமியை விடுவித்த உத்தரவு ரத்து: ஐகோர்ட்டு அதிரடி



சென்னை, ஏப்.29

சொத்துக்குவிப்பு வழக்கில் அமைச்சர் ஐ.பெரியசாமி, அவரது மனைவி, மகன்களை விடுவித்த திண்டுக்கல் சிறப்பு கோர்ட்டு உத்தரவை ரத்து செய்த சென்னை ஐகோர்ட்டு, அந்த வழக்கை 6 மாதங்களுக்குள் விசாரித்து முடிக்க உத்தரவிட்டுள்ளது.

அமைச்சர் ஐ.பெரியசாமி கடந்த 2006 முதல் 2010 ஆம் ஆண்டு வரை வருவாய், சட்டம், சிறை மற்றும் வீட்டுவசதி துறை அமைச்சராக இருந்த போது 2 கோடியே 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக அவர் மீதும், அவரது மனைவி சுசீலா, மகன்கள் செந்தில்குமார், பிரபு ஆகியோர் மீதும் லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்தவழக்குதிண்டுக்கல் மாவட்ட சிறப்பு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என்று கூறி ஐ.பெரியசாமி உள்ளிட்டோர் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை விசாரித்த சிறப்பு கோர்ட்டு, ஐ.பெரியசாமி உள்ளிட்ட 4 பேரையும் வழக்கில் இருந்து விடுவித்து உத்தரவிட்டது. இதைஎதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் 2018ம் ஆண்டு லஞ்ச ஒழிப்பு போலீசார் மேல்முறையீடு செய்தனர். இந்த வழக்கு நீதிபதி பி.வேல்முருகன் முன்பு விசாரணைக்கு வந்தது.


அப்போது, ஐ.பெரியசாமி உள்ளிட்டோர் தரப்பில் ஆஜரானவக்கீல்கள், லஞ்ச ஒழிப்பு போலீசார் கூறியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு முகாந்திரமே இல்லை. சொத்துக்களை முறையாக கணக்கிட வில்லை. அதனால், திண்டுக்கல் கோர்ட்டு சரியான உத்தரவை பிறப்பித்துள்ளது என்று கூறப்பட்டது.,

போலீஸ் தரப்பில் குற்றச்சாட்டுக்கு முகாந்திரம் உள்ளது. திண்டுக்கல் கோர்ட்டு நீதிபதி இதை பரிசீலிக்காமல் அனைவரையும் விடுவித்து விட்டார் என்று வாதிடப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, இந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்தார்.

இந்தநிலையில், இந்த வழக்கின்தீர்ப்பைஇன்று நீதிபதி பிறப்பித்தார். அதில், ''குற்றச்சாட்டுக்கு முகாந்திரம் உள்ளது. எனவே, திண்டுக்கல் கோர்ட்டு உத்தரவை ரத்து செய்கிறேன். இந்த வழக்கை திண்டுக்கல் கோர்ட்டு மீண்டும் விசாரிக்க வேண்டும்.

இந்த வழக்கு நீண்டகாலமாக நிலுவையில் இருப்பதால், தினந்தோறும் என்ற அடிப்படையில், வழக்கை விசாரித்து 6 மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்க வேண்டும்''என்று கூறியுள்ளார்.

## உணவு ஊட்டியபோது மூச்சு திணறி 3 வயது குழந்தை உயிரிழப்பு



திருச்சி, ஏப்.29

திருச்சியை அடுத்த திருவெறும்பூர்அருகே உள்ள பகவதிபுரம் 3வது தெருவைச் சேர்ந்த கனகலிங்கத்தின்மகன்கார்த்திக்(35 வயது). இவரது மனைவி தாரணி (30 வயது). இவர்களுக்கு சைலேஷ் (3 வயது) என்ற மகன் இருந்தான். தாரணி மீண்டும் கர்ப்பமான நிலையில், 2வது பிரசவத்திற்காகதிருச்சியில்உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கார்த்திக் மருத்துவமனையில் இருந்து தாரணியை கவனித்து வருகிறார்.

இதனால் சைலேஷ் தாத்தா, பாட்டியுடன் வீட்டில் இருந்துள்ளான். நேற்று கார்த்திக்கின் தங்கை அட்சயா ஸ்ரீ, சைலேசுக்கு உணவு ஊட்டியதாக கூறப்படுகிறது. அப்போது சைலேசுக்கு திடீரென மூச்சு திணறல் ஏற்பட்டுள்ளது. உடனடியாக குழந்தையை திருச்சியில் உள்ள ஒருதனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு சைலேசை பரிசோதித்த மருத்துவர்கள்கள், குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக கூறியுள்ளனர். இதுகுறித்து திருவெறும்பூர் போலீஸ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மன்னார்குடி அருகே மின்சாரம் தாக்கி 12 வயது சிறுமி உயிரிழப்பு




திருவாரூர், ஏப்.29

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே திருமேனிஏரி கிராமத்தைச் சேர்ந்த ஐயப்பன் மீனா தம்பதியின் மகள் அனுஷ்கா(12 வயது). 8ம் வகுப்பு படித்து வந்தார். இன்று காலையில் வீட்டில் இருந்த அனுஷ்கா மின் மோட்டாரை இயக்குவதற்காக சுவிட்சை போட்டுள்ளார்.

அப்போது எதிர்பாராத விதமாக சிறுமி மீது மின்சாரம் பாய்ந்தது. சிறுமியின் அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த உறவினர்கள் அனுஷ்காவை மீட்டு சிகிச்சைக்காக மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிறுமியை பரிசோதித்த மருத்துவர்கள், அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து திருமக்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் அந்தப் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ராமேஸ்வரம் பாக் ஜலசந்தி கடலில் இறந்து கரை ஒதுங்கிய ஜெல்லி மீன்கள்: மீனவர்கள் அச்சம்



ராமநாதபுரம், ஏப்.29

ராமேஸ்வரம் கடலில் திடீரென நூற்றுக்கணக்கான சொறி மீன் எனப்படும் ஜெல்லி மீன்கள், நேற்று முதல் கடற்கரையோரங்களில் இறந்து கரை ஒதுங்க துவங்கியுள்ளது. ஜெல்லி மீன்களில் பல வகைகள் உள்ளன. இது அகலம் 5 செ.மீ முதல் 3 அடி வரை இருக்கும். இதன்மொத்த உடற்பகுதியில் 5 சதவீதம் மட்டுமே திடப்பொருளாகும். மீதியனைத்தும் திரவப் பொருளான நீரால் இருக்கும்.

ராமேஸ்வரம் கடலில் தற்போது கரை ஒதுங்கும் ஜெல்லி மீன்கள் மனிதர்களுக்கு உடலில் அலர்ஜியை ஏற்படுத்தும் வகையை சேர்ந்தது. சேராங்கோட்டை முதல் கோதண்டராமர் கோயில் எதிரே கடற்கரை வரை 5 கி.மீ நூரத்திற்கு நூற்றுக்கணக்கான ஜெல்லி மீன்கள் கரை ஒதுங்கி கிடக்கின்றன. இதனால் அப்பகுதி மீனவர்களுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. மீனவர்கள் பலருக்கும் சொறி மீன் கடித்து அலர்ஜி ஏற்பட்டுள்ளதால் மீனவர்கள் பீதியடைந்துள்ளனர். மேலும், மீன் ஆராய்ச்சியாளர்கள் இதுகுறித்து ஆய்வு செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கிருஷ்ணகிரியில் காட்டு யானை தாக்கி விவசாயி பலி




கிருஷ்ணகிரி, ஏப்.29

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே அஞ்செட்டி தாலுகாவிற்கு உட்பட்ட ஜேசுராஜபுரம் கிராமத்தை சேர்ந்தவர் மதலைமுத்து (வயது 65), விவசாயி. இவர் மாடுகள் வளர்த்து பிழைப்பு நடத்தி வந்தார். நேற்று முன்தினம் காலையில் அவர் வீட்டில் இருந்து 7 மாடுகளை அவிழ்த்து மேய்ச்சலுக்காக அருகில் உள்ள ஏழு சுத்துக்கோட்டை வனப்பகுதிக்கு ஓட்டி சென்றார். ஆனால் அவர் மாலையில் நீண்ட நேரம் ஆகியும் திரும்பி வராததால் உறவினர்கள் தேடி சென்றனர்.

அப்போது ஒரு மாடு மட்டும் வீட்டிற்கு திரும்பி வந்தது. மற்ற 6 மாடுகள் திரும்பி வரவில்லை. மேலும் மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்து சென்ற விவசாயி மதலைமுத்து இரவு வரை வீடு திரும்பவில்லை. நீண்ட நேரம் தேடியும் அவர் என்ன ஆனார்? என்ற தகவல் கிடைக்கவில்லை.

இதனால் அதிர்ச்சி அடைந்த உறவினர்கள் நேற்று காலை ஏழு சுத்துக்கோட்டை வனப்பகுதிக்குள் சென்று தேடி பார்த்தனர். அப்போது அங்கு காட்டு யானை தாக்கி கால் துண்டாகி உடல் சிதைந்த நிலையில் மதலைமுத்து இறந்துகிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இந்த சம்பவம் குறித்து அஞ்செட்டி வனத்துறையினர் மற்றும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## முட்டைக்கோழி, கறிக்கோழி விலைகளில் மாற்றம் இல்லை



நாமக்கல், ஏப்.29

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 410 காசுகளாக இருந்து வந்தது. நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் அதன் விலையை 10 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 420 காசுகளாக அதிகரித்து உள்ளது.

முட்டைக்கோழிகிலோ ரூ.85க்கும், கறிக்கோழி கிலோ ரூ.88க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## சிவகங்கையில் தி.மு.க. நிர்வாகி வெட்டிக் கொலை: 3 பேர் கைது



சிவகங்கை, ஏப்.29

சிவகங்கை அருகே சாமியார்பட்டியைச் சேர்ந்தவர் பிரவீன் குமார் (27வயது). இவர்தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு பிரிவின் மாவட்டத் துணை அமைப்பாளராக இருந்தார். ரியல் எஸ்டேட் மற்றும் கான்ட்ராக்ட் தொழில் செய்து வந்தார். நேற்று பிற்பகல் பிரவீன்குமார், சாமியார்பட்டியில் உள்ள அவரது தோப்பில் இருந்தார். அப்போது டூவீலரில் வந்த ஒரு கும்பல், பிரவீன்குமாரை சரமாரியாக அரிவாளால் வெட்டிவிட்டுதப்பிச்சென்றது.

பிரவீன்குமாரின் அலறல் சத்தத்தை கேட்டு அருகில் இருந்தவர்கள், அவரை மீட்டு, சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் வழியிலேயே அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்த தகவல் அறிந்து வந்த அவரது உறவினர்கள், கொலையாளிகளை கைது செய்ய வலியுறுத்தி சிவகங்கை மானாமதுரை சாலையில் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மறியலில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து எஸ்.பி. ஆசிஸ் ராவத் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இதையடுத்து அவர்கள் கலைந்து சென்றனர். இந்த சம்பவம் குறித்து சிவகங்கை போலீசார் வழக்குப்பதிவு விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் இந்த கொலை வழக்கில் சாமியார்பட்டியைச் சேர்ந்த விக்கி (எ) கருணாகரன்(20 வயது), சிவகங்கையைச் சேர்ந்த பிரபாகரன்(19 வயது), திருப்பத்தூர் நரசிங்கபுரத்தைச் சேர்ந்த குரு (21 வயது) ஆகிய 3 பேரை கைது செய்தனர். முன்விரோதம் காரணமாக கொலை நடந்ததா அல்லது வேறு ஏதும் காரணமா என தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 10 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை: போக்சோவில் வாலிபர் கைது



மதுரை, ஏப்.29

மதுரை ஆரப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் ஆண்டனி டேவிட்ராஜ் (வயது 30). உணவு டெலிவரி செய்யும் வேலை செய்து வருகிறார். சம்பவத்தன்று இவர், உணவு டெலிவரிக்காக மதுரையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கு சென்றுள்ளார்.

அப்போது அந்த பகுதியில் நின்று கொண்டிருந்த 10 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இதுகுறித்து அந்த சிறுமி பெற்றோரிடம் தெரிவித்தாள். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர், உடனடியாக இதுகுறித்து போலீசில் புகார் அளித்தனர்.

இந்த புகாரின் பேரில் அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதனை தொடர்ந்து, சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த ஆண்டனி டேவிட்ராஜை, போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

## திருச்செந்தூரில் திடீரென உள்வாங்கிய கடல்



தூத்துக்குடி, ஏப்.29

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும், அய்யா வைகுண்டர் அவதாரபதிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்கள், முந்திய நாட்கள், பிந்திய நாட்களில் காலையில் கடல்நீர் உள்வாங்குவதும் வழக்கமாகும்,

இந்த நிலையில், அமாவாசை தினமான நேற்று திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் கடற்கரையில் சுமார் 60 அடி தூரத்துக்கு கடல் உள்வாங்கியது. இதனால் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தது. எனினும், பக்தர்கள் அச்சமின்றி கடலில் புனித நீராடியதுடன், தங்களது செல்போன்களில் செல்பி எடுத்தும் மகிழ்ந்தனர்.

## மின்சாரம் தாக்கி பள்ளி மாணவர் பலி: பிறந்தநாளில் உயிரிழந்த சோகம்



தஞ்சை, ஏப்.29

திருக்காட்டுப்பள்ளி அருகே பிறந்த நாளில் மின்சாரம் தாக்கி மாணவர் உயிரிழந்தார்.

தஞ்சை மாவட்டம் பூதலூர் காங்கேயர்டவுன்ஷிப் பகுதியைச் சேர்ந்தவர் சம்பத். இவருடைய மனைவி தமிழரசி. இவர்களுடைய மகன் லோக கணேஷ் (17 வயது). இவர் திருச்சி மாவட்டம் திருவெறும்பூரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வந்தார்.

தந்தை சம்பத் இறந்து விட்டதால் தாயார் தமிழரசி பராமரிப்பில் வளர்ந்து வந்தார். லோக கணேசுக்கு நேற்று முந்தினம் பிறந்தநாள் என்பதால் தனது பாட்டி வீடான பூதலூர் அருகே உள்ள விண்ணமங்கலம் தெற்கு தெருவிற்கு தனது தாய் தமிழரசியுடன் சென்றிருந்தார்.

பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்து விட்டு குளிப்பதற்காக லோக கணேஷ் குளியலறைக்கு சென்று மின்விளக்கு சுவிட்சை போட்டுள்ளார். அப்போது அவரை மின்சாரம் தாக்கியது. இதில் மயங்கி விழுந்த அவரை அக்கம், பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக பூதலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், மாணவன் லோக கணேஷ் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து திருக்காட்டுப்பள்ளி போலீஸ் சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் பாலதண்டாயுதம் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். பிறந்த நாள் அன்று மின்சாரம் தாக்கி மாணவர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## போலி உயிலை வைத்து அபகரிக்க முயற்சி... இருட்டுக்கடை விவகாரத்தில் திடீர் திருப்பம்



நெல்லை, ஏப்.29

நயன்சிங் கொடுத்த பொது அறிவிப்பை யாரும் நம்ப வேண்டாம் என்று கவிதா சிங் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக இருட்டுக்கடை அல்வா திகழ்ந்து வருகிறது. இந்த கடையின் உரிமையாளராக கவிதா சிங் இருப்பதாக கூறப்பட்டு வரும் நிலையில், அந்த கடை உயில் மூலம் தனக்கே சொந்தமானது என்று கவிதா சிங்கின் அண்ணனும், டவுன் வாகையடி முனையில் பேக்கரி நடத்தி வருபவருமான நயன்சிங் கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில், இருட்டுக்கடை தனக்கே சொந்தம் என்றும், தன்னிடம் அதற்கான உயில் இருப்பதாகவும் கவிதா சிங்கின் சகோதரர் நயன்சிங் அண்மையில் தெரிவித்தார். இதற்கு பதிலளிக்கும் வகையில், கவிதா சிங் தரப்பில் வழக்கறிஞர் மூலம் பொது அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதில், நயன்சிங் வெளியிட்டுள்ள பொது அறிவிப்பில் இடம்பெற்றுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானது. பதிவு செய்யப்படாத போலி உயிலை தயார் செய்து இருட்டுக்கடை உள்ளிட்ட சொத்துக்களை அபகரிக்க முயற்சிக்கிறார். கடந்த 2020ம் ஆண்டு முதல் எனது கட்சிக்காரரான கவிதாவே இருட்டுக்கடையை நிர்வகித்து வருகிறார். கடையின் உரிமையாளரான சுலோச்சனா பாயின் இறுதி காலத்திலேயே அவரது விருப்பத்தின் பெயரிலேயே கடையை நடத்தி வருகிறார்.

சுலோச்சனா பாய் உயிரோடு இருந்த வரை நயன் சிங் எந்த சொத்துக்களுக்கும் உரிமை கோரவில்லை. இருட்டுக்கடை விவகாரத்தில் எந்த வழக்கும் நயன் சிங்கால் தொடரப்படவில்லை. இருட்டுக்கடை தொடர்பாக எவ்வித வழக்கும் அவர் பதிவு செய்யவில்லை. ஆகவே நயன்சிங் கொடுத்த பொது அறிவிப்பை யாரும் நம்ப வேண்டாம். போலி உயில் குறித்து கவிதா தரப்பில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு: ஜெயலலிதா உதவியாளருக்கு சம்மன்




கோயம்புத்தூர் ஏப்.29

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே கோடநாடு பங்களாவில் கடந்த 2017ல் நடந்த கொலை மற்றும் கொள்ளை வழக்கு விசாரணை கடந்த 2022ல் சிபிசிஐடி போலீசாருக்கு மாற்றப்பட்டது. 2022லிருந்து சிபிசிஐடி போலீசார் இந்த வழக்கைவிசாரித்து வருகின்றனர். ஏடிஎஸ்பி முருகவேல் தலைமையில் தொடர்ந்து நடைபெற்று வரும் விசாரணையில் இதுவரை 250 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு ஊட்டி கோர்ட்டில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் இந்த வழக்கு தொடர்பாக முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதாவின் உதவியாளர் பூங்குன்றன் வருகிற மே 6ம் தேதி கோவை காந்திபுரத்தில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டுமென்று சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. முன்னதாக அவரிடம் ஏற்கெனவே கடந்த 2022ம் ஆண்டு சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# செந்தில் பாலாஜி, பொன்முடி ராஜினாமா மீண்டும் அமைச்சராகிறார் மனோ தங்கராஜ்



சென்னை, ஏப்.29

தமிழ்நாடு சட்டசபை தேர்தலுக்கு இன்னும் பத்து மாதங்களே உள்ள நிலையில் தி.மு.க. உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கு தீவிரமாக தயாராகி வருகின்றன. இந்த சூழலில், தமிழ்நாடு அமைச்சரவையில் விரைவில் மாற்றம் இருக்கும் என்றும்,

இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனவும் தகவல் இருந்தது.

இந்த நிலையில் தமிழக அமைச்சரவையில் செய்யப்பட்டுள்ள மாற்றம் தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்று வெளியாகியுள்ளது. இதன்படி செந்தில் பாலாஜி, பொன்முடி ஆகியோர் அமைச்சர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பொன்முடி வகித்த வனத்துறை, அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செந்தில் பாலாஜி வகித்து வந்த மின்சாரத்துறை, அமைச்சர் சிவசங்கருக்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் முத்துசாமிக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வத்துறை கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

மனோ தங்கராஜ் மீண்டும் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளார். அவருக்கு மீண்டும் பால்வளத்துறை வழங்கப்படலாம் என தகவல் வெளியாகி உள்ளது. நாளை மாலை 6 மணிக்கு கவர்னர் மாளிகையில் புதிய அமைச்சர்கள் பதவியேற்பு விழா நடைபெறுகிறது.

இந்த நிலையில், செந்தில் பாலாஜி மற்றும் பொன்முடி ஆகியோர் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளனர். இருவரின் ராஜினாமா கடிதங்களும் ஏற்கப்பட்டதாக கவர்னர் மாளிகை தெரிவித்துள்ளது. செந்தில் பாலாஜிக்கு எதிரான வழக்கில் ஜாமீனா? அல்லது அமைச்சர் பதவியா? என சுப்ரீம் கோர்ட்டு கேள்வி எழுப்பியிருந்த நிலையில், இன்று அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அரசு பள்ளிகளில் 2,381 அங்கன்வாடி மையங்கள் செயல்பட அனுமதி: பள்ளிக்கல்வித்துறை தகவல்




சென்னை, ஏப்.29

அரசு பள்ளிகளில் 2,381 அங்கன்வாடி மையங்கள் தொடர்ந்து செயல்பட அனுமதி அளித்தும், அதில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியத்தை முறையாக வழங்க வேண்டும் என்றும் பள்ளிக்கல்வித்துறை சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

அதில், 'அங்கன்வாடி மையத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாதந்தோறும் முதல் தேதியிலேயே ஊதியம் வழங்கும் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். இதில் எவ்வித காலதாமதமும் இருக்கக்கூடாது. இதை மாவட்டக் கல்வி அலுவலர் ஆய்வு செய்ய வேண்டும். மழலையர் வகுப்புகளை கையாளும் தற்காலிக சிறப்பாசிரியர்களுக்கு மாதம் ஒரு நாள் தற்செயல் விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. மேலும், இந்த ஆசிரியர்களின் விவரங்களை எமிஸ் தளத்தில் பதிவேற்றம் செய்து அவர்கள் எமிஸ் எண் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கட்டுமான பொருள்களின் அநியாய விலை ஏற்றம்???




மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்! கட்டுமானப் பொருட்களின் அநியாயவிலையேற்றத்தைஎதிர்த்து நாம் ஒன்றிணைகிறோம்! மதுரை மாவட்ட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் சங்கங்களின் கூட்டமைப்புடன், நடவடிக்கையில் ஈடுபடுங்கள். தேதி: 29.04.2025 (செவ்வாய்க்கிழமை) நேரம்: காலை 10.00 மணி ☐ இடம்: பழங்காநத்தம் (நடராஜ் தியேட்டர் அருகில்)☐ 50இலட்சம்தொழிலாளர்களின்வாழ்வை சிதைக்காதே! ☐ சொந்த வீட்டுக் கனவில் வாழும் நடுத்தர, ஏழை வாக்காளர்களின் வாழ்வில் மண் அள்ளுவதைக் கொண்டுள்ள இந்த விலையேற்றத்தை எதிர்க்க, எல்லோரும் கலந்து கொள்ள வேண்டுமென அழைக்கிறார்கள்!!!

# கோவையில் ஓட்டலுக்கு வெடிகுண்டு மிரட்டல்: விஜய் தங்கிய இடத்துக்கு பாதுகாப்பு அதிகரிப்பு



கோவை, ஏப்.29

த.வெ.க.வின் வாக்குச்சாவடி முகவர்களுக்கான கூட்டம் கோவை யில் தொடங்கியது. இதில் கலந்துகொள்ளத.வெ.க. தலைவர் விஜய் கோவை வந்தார்.

த.வெ.க. வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் நடக்கிறது. அதில் கலந்து கொள்வதற்காகத.வெ.க. தலைவர்விஜய், கோவை அவினாசி ரோடு லீமெரிடியன் ஓட்டலில் தங்கி உள்ளார். அந்த ஓட்டல் அருகில் கோகுலம் பார்க் என்ற மற்றொரு ஓட்டல் உள்ளது. அந்த ஓட்டலுக்கு ஒரு இமெயில் வந்தது. அதில், அந்த ஓட்டலில் வெடிகுண்டு வைக்கப்பட்டு இருப்பதாக குறிப்பிடப் பட்டு இருந்தது.

அதை பார்த்து ஓட்டல் நிர்வாகத்தினர் அதிர்ச்சி அடைந்தனர். இது குறித்த தகவலின் பேரில் கோவை மாவட்ட போலீசார் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் விரைந்து சென்று அந்த ஓட்டலில் தீவிர சோதனை நடத்தினார்கள். அப்போது அங்கு வெடிகுண்டு ஏதும் இல்லை. யாரோ இமெயில் மூலம் புரளியை கிளப்பியது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து விஜய் தங்கி உள்ள லீமெரிடியன் ஓட்டலுக்கு போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டு உள்ளது.விஜய் தங்கிய ஓட்டலின் அருகே உள்ள மற்றொரு ஓட்டலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திமுக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை அதிமுக கூட்டத்தில் நடிகை கௌதமி குற்றச்சாட்டு




ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் பழைய பஸ் ஸ்டாண்டில் ராணிப்பேட்டை கிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் திமுக அமைச்சர் பொன்முடி கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட மகளிர் அணி செயலாளர் மணிமேகலை தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர்கள் விஜயன்,பழனி, பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரக்கோணம் நகர செயலாளர் பாண்டுரகன் அனைவரையும் வரவேற்றார்.

இந் நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அதிமுக மாநில கொள்கைபரப்பு துணைச் செயலாளர் நடிகை கௌதமி, ராணிப்பேட்டை கிழக்கு மாவட்ட செயலாளர், அர க்கோணம் சட்ட மன்ற உறு ப்பினர் சு.ரவி எம்எல்ஏ, அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கோ.ஹரி. ஆகியோர்கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பேசிய கௌதமி , திமுக ஆட்சியில் சிறிதுகூட பெண்களுக்கு மரியாதை இல்லை, சில நாட்களுக்கு முன்பு, ஒரு கூட்டத்தில் பேசிய அமைச்சர் பொன்முடி பெண்களைப் பற்றியும், சைவ வைணவம் பற்றியும் மிகவும் தரை குறைவாகவும் கேவலமாகவும் பேசி பெண் இனத்தையும், இந்து மதத்தையும் புண்படுத்தி உள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலின் இந்த ஆட்சி மகளிருக்கான ஆட்சி என்றுதம்பட்டம்அடித்து கொள்கிறார். ஆனால் தமிழ்நாட்டில் பெண்களுக்கு சிறிதளவும் பாதுகாப்பை இல்லை 3 வயது குழந்தை முதல் 80 வயது மூதாட்டி வரை பாலியல் தொல்லை அலறி கொண்டு இருக்கின்றனர். இதை கட்டுப்படுத்த வேண்டிய முதல்வர் தலைமையில் காவல் துறை வேடிக்கை பார்த்து கொண்டிருக்கிறது எனவே பெண்களுக்கு பாதுகாப்பான அதிமுக ஆச்சி தமிழகத்தில் மீண்டும் மலர நீங்கள் அதிமுகவுக்கு ஆதரவு தர வேண்டும் என பேசினார். இந்த கூட்டத்தில் மாவட்டம் ஒன்றியம் நகர நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பொன்முடி, செந்தில் பாலாஜி நீக்கம் தமிழிசை சவுந்தரராஜன் விமர்சனம்



சென்னை, ஏப்.29

பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

இரண்டு அமைச்சர்கள்.. இந்த இருண்ட ஆட்சியின் அமைச்சரவையில் இருந்து நீக்கப்படுகிறார்கள்.. ஒருவர் பொன்முடி மற்றொருவர் செந்தில் பாலாஜி.. இவர்கள்இரண்டுபேரும் நீக்கப்பட வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது... ஒருவர் நீக்கப்படுவது பெண்களுக்கு எதிரான துறையாக கருதப்படும் டாஸ்மாக்கில் முறைகேடு நடந்ததனால்... மற்றொருவர் நீக்கப்படுவது... பெண்களுக்கு எதிராக முறைகேடாக பேசியதால்..

இந்த இரண்டு முறைகேடுகளைப் பற்றி தொடர்ந்து கோரிக்கை வைத்தாலும் முதலமைச்சர் ஸ்டாலின் செவி சாய்க்காமல் இருந்தார்.. இன்று நீதிமன்றத்தின்.. கட்டாயத்தின் பேரிலும் மக்கள் மன்றத்தின் கட்டாயத்தின் பெயரிலும்.. இருவரும் நீக்கப்பட்டிருக்கிறார்கள்.. ஆக தவறு செய்தவர்களை.. இனி மேலும் தொடர முடியாது என்ற நிலை வந்ததனால் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.. இல்லையென்றால் தொடர்ந்து இருந்திருப்பார்கள்.. இனிமேல் பொறுக்க முடியாது என்ற சூழ்நிலை வந்ததனால் தான் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களே தவிர இல்லை என்றால் பொறுத்து போயிருப்பார்கள்... ஆக இந்த நடவடிக்கை.. தானாக எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல தவிர்க்க முடியாமல் எடுக்கப்பட்ட நடவடிக்கை... என்பதை மக்கள் நன்கு புரிந்து கொள்வார்கள்.. 2026 திமுகவிற்கு எதிராக பதில் சொல்வார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தகாத உறவுக்கு இடையூறாக இருந்த குழந்தையை கொன்ற ஜார்க்கண்ட் பெண் கைது




நாமக்கல், ஏப்.29

ஜார்க்கண்ட் மாநிலம் சக்கரத்தாப்பூர் பகுதியை சேர்ந்த ரதி கோத்ரா என்பவருக்கும், அதே பகுதியை சேர்ந்த ரமேஷ் கக்கிரி என்பவருக்கும் திருமணம் ஆகி, ஒன்றரை வயதில் பெண் குழந்தை இருந்தது. இதனிடையே, ரதி கோத்ரா வேறொரு வாலிபரை காதலித்து வந்ததுள்ளார்.

தொடர்ந்து ரதி கோத்ரா தனது கள்ளக்காதலனை அடிக்கடி தனிமையில் சந்தித்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், ரதி கோத்ரா தனது தகாத உறவிற்கு இடையூறாக இருந்ததாக, தனது ஒன்றரை வயது குழந்தையை கழுத்தைநெரித்து கொலை செய்து பின்பு, உடலை சாக்கடையில் வீசியுள்ளார்.

அதன்பிறகு நாமக்கல் மாவட்டம், வெப்படை பகுதியில் உள்ள தனியார் நூற்பாலைக்கு வந்து ஒன்றும் தெரியாதது போல ரதி கோத்ரா பணியாற்றி உள்ளார். இந்த வழக்கில் ரதி கோத்ராவை தேடி வந்த ஜார்க்கண்ட் மாநில போலீசார், நாமக்கல் மாவட்ட போலீசாரின் உதவியோடு அவரை கைதுசெய்துஜார்க்கண்ட் அழைத்துச் சென்றனர்.

# ஆரணி பகுதியில் உள்ள தனியார் ஐடிஐ மாணவர்களுக்கு வளாக நேர்காணல்




ஆரணி ஏப் 29

ஆரணி பகுதியில் உள்ள தனியார் ஐடிஐ மாணவர்களுக்குவளாகநேர்காணல் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை திருவண்ணாமலை மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம் மற்றும் ஆரணி பகுதி தனியார் தொழிற் பயிற்சி மையம்(ஆரணி ஐடிஐ) இணைந்து 202425 ம் ஆண்டில் பயிற்சி நிறைவு செய்யும் தனியார் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் தொழில் பழகுநர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட திறன் பயிற்சி உதவி இயக்குநர் அ.தனகீர்த்தி, தலைமை தாங்கினார், ஆரணி ஐடிஐ நிர்வாகி ஜோதிலிங்கம் முன்னிலை வகித்தார் ஆரணி ஐடிஐ முதல்வர் அமுத சேகர் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட திறன் பயிற்சி உதவி இயக்குநர் அ.தனகீர்த்தி பேசியது: திருவண்ணாமலை மாவட்டத்தை சுற்றிலும் அதிக அளவில் இண்டஸ்ரியல் கள் உள்ளது, அதே போல் வேலைவாய்ப்பும் அதிக அளவில் உள்ளது மாணவர்கள் வேலையில் சேருவதில்லை, ஆகையால்தான் அரசாங்கமே வேலைவாய்ப்பு ஏற்படுத்தியுள்ளது இதில் தேர்வாகும் மாணவர்களுக்கு ஒரு வருடம் பயிற்சி அளிக்கப்பட்டு பின்னர் வேலைக்கு ஆட்களை எடுத்து கொள்வார்கள். நீங்கள் பயிற்சியின் போது சிறப்பாக செயல்பட வேண்டும், இங்கு 15 இண்டஸ்ரியல் நிறுவனங்கள் வந்துள்ளது அனைவரும் நேர்கானலில் பங்கேற்று தேர்ச்சி பெற்று வேலைக்கு சென்று வாழ்க்கையில் முன்னேறுங்கள் இவ்வாறு பேசினார்.

சிறப்பு முகாமில் எச்.வி. எப், சௌத் ரயில்வே காரஜ் மற்றும் வேகன் ஒர்க், வேலூர் தமிழ்நாடு போக்குவரத்து கழகம், ஸ்விங் செட்டர் (இந்தியா) பி லிட்., காஞ்சிபுரம் எல். டி, செய்யார் ராக் மேன் இண்டஸ்ரியல், ஆவடி சிம்சன், பிருந்தாவனம் ஜான்சன் பிரைவேட் லிமிடெட், பாண்டிச்சேரி சாரம், திருமுடிவாக்கம் ஸ்ரீனிவாசா மோல்ட் உள்ளிட்ட 15 நிறுவனங்கள் பங்கேற்று மாணவர்களை நேர்காணல் செய்தது. முகாமில் ஆரணி ஐடிஐ, கலைமகள் ஐடிஐ, போளூர் ஐடிஐ, டான் போஸ்கோ ஐடிஐ, அண்ணாமலையார் ஐடிஐ, சம்புவராயர் ஐடிஐ, கோடாப் ஐடிஐ உள்ளிட்ட ஐடிஐ மாணவர்கள் பங்கேற்றனர்.

# ரேஷன் கடையில் வழங்கப்படும் மலிவு விலை துவரம் பருப்பில் கலப்படம் சீமான் கண்டனம்



சென்னை, ஏப்.29

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு அரசின் பொது வழங்கல் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் ரேஷன் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்த துவரம் பருப்பில் பட்டாணி பருப்பு கலப்படம் செய்யப்பட்டிருப்பதுஅதிர்ச்சி அளிக்கிறது.

ஐம்பதாண்டு கால திராவிட ஆட்சியில் ஊழல் முறைகேடுகள் நடைபெறாத துறையே இல்லை என்ற அளவிற்கு அரசுத்துறைகள் அத்தனையிலும் ஊழல் மலிந்து காணப்படுகிறது. குறிப்பாக தமிழ்நாடு அரசின் உணவு பொருள் வழங்கல் துறையின் கீழ் பொது விநியோக திட்டத்தில் மக்களுக்கு இலவச உணவுப்பொருள் வழங்குகிறோம் என்ற பெயரில் உண்ண முடியாத அளவிற்கு தரமற்ற கலப்பட அரிசியே பல ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது. அதன் உச்சமாக தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு வழங்கப்பட்ட பொங்கல் தொகுப்பில் பல்லி விழுந்த புளி, உருகிய வெல்லம், உடைந்த கரும்பு என்று தரமற்ற பொருட்களை வழங்கி மிகப்பெரிய ஊழல் புரிந்தது.

கலப்பட ஊழல் வெளிச்சத்திற்கு வந்தவுடன் உடனடியாக ஒப்பந்ததாரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்துள்ள தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் துறை இத்தனை நாட்களாக உறங்கிக்கொண்டிருந்தது ஏன்? எத்தனை ஆண்டுகளாக இத்தகைய கலப்படம் நடைபெற்று வருகிறது? இதில் தொடர்புடையவர்கள் யார், யார்? பொதுவிநியோகப் பொருட்கள் ஒவ்வொரு மாதமும் சரியாக, தரமாக வழங்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய தமிழ்நாடு அரசு தவறியது ஏன்? மாவட்ட கலெக்டர் ஆய்வு செய்யும் இதுநாள்வரை, உணவுப்பொருள் வழங்கல் துறை அதிகாரிகள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்?

அரிசி, கோதுமை, பாமாயில், சர்க்கரை என்று ரேஷன் கடையில் வழங்கப்படும் அத்தனை பொருட்களிலும் கலப்படம் எனும்போது துவரம் பருப்பில் மட்டும் கலப்படம் களைய நடவடிக்கை என்பது அரசின் ஏமாற்று அறிவிப்பாகும்.

தமிழ்நாடு அரசு விற்கும் ஆவின் பாலில் தண்ணீர் கலப்படம்; பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் சத்துணவு முட்டையில் கூமுட்டைகள் கலப்படம்; பொங்கல் விழா பரிசுத் தொகுப்பில் கலப்படம்; ரேஷன் கடையில் வழங்கப்படும் அரிசி, பருப்பு, பாமாயில், சர்க்கரையில் கலப்படம்; சுகாதாரத்துறையில் வழங்கப்படும் மருந்துகளில் கலப்படம்; வேளாண்துறையில் விவசாயிகளுக்கு விற்கப்படும் உரத்தில் கலப்படம்; மாநகராட்சி வழங்கும் குடிநீரில் சாக்கடை நீர் கலப்படம்; மாநில கல்விக்கொள்கையில் மத்தியகல்விக்கொள்கை கலப்படம் என்று திராவிட மாடல் தி.மு.க. ஆட்சியின் கலப்பட பட்டியல் நீண்டுகொண்டே போகும்!

திராவிடமே கலப்படம் எனும்போது திராவிட ஆட்சியில் அனைத்து துறையிலும் கலப்படம் இருப்பதில் வியக்க ஒன்றுமில்லை தான். ஆனால், ரேஷன் கடைகள் மூலம் மக்களுக்கு மலிவு விலையில் உணவுப்பொருள் வழங்குவதாக மார்தட்டும் தி.மு.க. அரசு, கலப்படப் பொருட்களை வழங்கி மக்களின் உயிரோடும், உடல் நலனோடும் விளையாடுகின்ற முறைகேடுகளை உடனடியாக களைய வேண்டும்.

ஆகவே, உணவுப்பொருள் வழங்கல் துறையில் நடைபெறும் ஊழலைத் தடுத்து நிறுத்தி, மக்களுக்குத் தரமான பொருட்கள் வழங்கி பெயருக்கேற்ப ரேஷன் கடைகள் நியாயமாக செயல்படுவதை தமிழ்நாடு அரசு உறுதி செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல்லில் நுங்கு விற்பனை ஜோர்



திண்டுக்கல்லில் நுங்கு விற்பனை ஜோர் தற்போது கோடை வெயிலின்தாக்கம்அதிகமாககாணப்படுவதால்பொதுமக்கள் மிகவும் வதிப்பட்டுவருகின்றனர். இந்நிலையில் தற்போது நுங்கு சீசன் தொடங்கியது. நுங்கு உடலை குளிர்ச்சியாக்கும் என்பதால், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை நுங்கு வாங்கி சாப்பிட்டு வருகின்றனர். இதனால் நுங்கு விற்பனை அமோகமாக உள்ளது. தற்போது 1 நுங்கு ரூ.10 வரை விற்கப்படுகிறது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

29.4.2025

## புதுச்சேரி முன்னாள் திமுக எம் எல் ஏ நந்தா சரவணன் ஏற்பாட்டில் 5000 பெண்களுக்கு நலத்திட்ட உதவி



திமுக தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக முத்தியால்பேட்டையில் உள்ள மகளிர் சுய உதவி குழுக்களுக்கு நல உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

முத்தியால்பேட்டை திமுக முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் நந்தா சரவணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான சிவா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவினை துவக்கி வைத்தார். இதில் 250 மகளிர் சுய உதவி குழுக்களை சேர்ந்த 5000 மகளிருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் திமுக மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார், திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் கோபால், இளைஞரணி மாநில துணை அமைப்பாளர் டாக்டர் ரித்தீஷ் மற்றும் தொகுதி நிர்வாகிகள், கழகப் பொறுப்பாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் தொகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## எம்.சாண்டு, பிசாண்டு விலையை ரூ.1,000 குறைத்து விற்க தமிழக அரசு உத்தரவு



சென்னை,

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில், கல்குவாரி, கிரஷர்கள் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கம் 25.04.2025 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ள கோரிக்கைகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மனுவில் குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதன்படி, கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கம் எம் சாண்டு, பிசாண்டு மற்றும் ஜல்லி ஆகியவற்றிக்கு ஏற்றப்பட்ட விலையிலிருந்து ரூ.1,000/ குறைத்து விற்பனை செய்யப்படும். சாதாரண கற்கள் மீதான சீனியரேஜ் தொகையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.33/ என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான அரசாணை ஒரு வார காலத்திற்குள் வெளியிடப்படும்.

இக்கூட்டத்தில், இயற்கை வளங்கள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர்கே. பணீந்திரரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் எ. சரவண வேல்ராஜ், கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.சின்னசாமி, சங்கத்தின் உறுப்பினர்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஊத்துக்காடு அருள்மிகு தேதி ஸ்ரீ எல்லம்மன் தேவஸ்தானம் தெப்பல் உற்சவம் மற்றும் சிம்ம வாகனத்தில் அம்பாள் பக்தர்களுக்கு காட்சியளித்தார்



காஞ்சிபுரம் ஏப்ரல் 29

காஞ்சிபுரம் அடுத்த வாலாஜாபாத் வட்டத்திற் குட்பட்ட ஊத்துக்காடு கிராமத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு தேவி ஸ்ரீ எல்லம்மன் தேவஸ்தானத்தில் அம்மன் சடல்முள் புறப்பாடு, தெப்பல் உற்சவம், பாரிவேட்டை மற்றும் இரவு சிம்ம வாகனத்தில் வண்ண வண்ண பிரம்மாண்ட மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பல்லக்கு தூக்கி, ஊஞ்சல் சேவையில் கோடான கோடி பக்தர்களுக்கு காட்சியளித்து அருள் வழங்கினார். மேலும் பக்தர்களும் அம்மனை வழிபட்டு தங்கள் நேர்த்தி கடனை அம்மனுக்கு செலுத்தி விட்டு கற்பூரம் தீபம் ஆரத்தி எடுத்து அம்மனை மனம் உருகி தரிசனம் செய்தனர் மேலும் ஊத்துக்காடு எல்லம்மன் திருவிழாக்கு வந்திருந்த பக்தர்களுக்கு குடிநீர், உணவு உள்ளிட்ட பக்தர்களுக்கு தேவையான வசதிகளை பிரம்மாண்ட முறையில் ஏற்பாடு செய்த ஊத்துக்காடு அருள்மிகு தேதிஸ்ரீஎல்லம்மன்தேவஸ்தானம் அறங்காவலர்கள் ஜிகே.பாஸ்கர் நாயுடு, பி.சாந்தி என்கின்ற சாந்த லட்சுமி, ஜி.சீனிவாசன் நாயுடு, என்எஸ். விஜயகுமார் நாயுடு, எம். உமாசங்கர் நாயுடு, நந்தகுமார் ஆகியோர் வெகு சிறப்பாக செய்தனர் மேலும் வந்திருந்த பக்தர்களுக்கு வாலாஜாபாத் காவல் துறையினர் சார்பாக பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

## திருப்பதி அருகே பயங்கர விபத்து; கன்டெய்னர் லாரியும் காரும் மோதல்: தமிழர்கள் 5 பேர் பலி

திருப்பதி

திருப்பதி அருகே நடந்த விபத்தில் சிக்கி ஒசூரை சேர்ந்த 5 பேர் பலியாகிவிட்டனர். மேலும் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒசூரை சேர்ந்தவர்கள் காரில் திருப்பதிக்கு சென்று கொண்டிருந்தனர். அப்போது திருப்பதி அருகே பூதலப்பட்டுநாயுடுப்பேட்டை சாலையில் கன்டெய்னர் லாரி ஒன்று வந்து கொண்டிருந்தது.

அப்போது அந்த லாரியின் பின்புறம் வேகமாக வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து லாரி மீது மோதியது.

இந்த விபத்தில் காரில் பயணம் செய்த 7 பேரில் 5 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகிவிட்டனர். மேலும் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தகவலறிந்த போலீஸார் சம்பவ இடத்திற்கு வந்து இறந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். முதற்கட்டமாக நடந்த விசாரணையில் இறந்தவர்கள் 5 பேரும் தமிழகத்தை சேர்ந்தவர்கள் என தெரியவந்தது.

இரு பெண்கள், இரு ஆண்கள், ஒரு சிறுவன் உள்பட 5 பேர் பலியாகியுள்ளனர். இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## வாலாஜாபாத் பாலாறு லயன்ஸ் சங்கம் சார்பாக நெகிழி ஒழிப்பு விழிப்புணர்வு மற்றும் மஞ்சப்பை வழங்குதல்




காஞ்சிபுரம் ஏப் 29

காஞ்சிபுரம் அடுத்த வாலாஜாபாத் பேருந்து நிலையத்தில் வாலாஜாபாத் பாலாறு லயன்ஸ் சங்கம் மற்றும் திருவேணி அகாடமி பள்ளி ஆகியோர் இணைந்து நடத்திய பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நெகிழி ஒழிப்பு விழிப்புணர்வு மற்றும் மஞ்சள் பை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் வாலாஜாபாத் பாலாறு லயன்ஸ் சங்க தலைவர் மார்க்கெட் அரிக்குமார், செயலர் பாலசுப்பிரமணியன், பொருளர் விஜயகுமார் ஆகியோரும் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நெகிழி ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் பொதுமக்களுக்கு மஞ்சப்பை பயன்படுத்துவதால் நன்மைகள் குறித்த ஆலோசனைகளை வழங்கி பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டு மஞ்சப்பை வழங்கினார்கள் .

இந்நிகழ்ச்சியில் வாலாஜாபாத் பாலாறு லயன்ஸ் சங்க மண்டல தலைவர் அன்னபூர்ணா ஹோட்டல் நிறுவனர் வேலாயுதம், திரிவேணி அகாடமி பள்ளி முதல்வர் டாக்டர் ஆனந்த் மற்றும் பாலாறு லயன் சங்க நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நிலக்கோட்டையில் கதவை உடைத்து அரிசி திருட்டு




திண்டுக்கல் நிலக்கோட்டை அருகே சிலுக்குவார்பட்டியைச் சேர்ந்தவர் கார்த்திக் (35). இவர் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறார். இவர் காலை மீண்டும் கடை திறக்க வந்த போது கடையின் பூட்டுகள் உடைக்கப்பட்டிருந்தன. இதனால் பதட்டமான அவர் உள்ளே சென்று பார்த்த போது 15 சிப்பம் அரிசி மூடை மற்றும் கல்லாவில் இருந்த ரூ.60 ஆயிரம் திருடு போனது தெரியவந்தது. இதுகுறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## 'டான்'களுக்கு ஜோடியாக நடிப்பது ஏன்? ஸ்ரீநிதி ஷெட்டி விளக்கம்



கன்னடத்தில் வெளியாகி இந்திய சினிமாவையே திரும்பி பார்க்க வைத்த படம், 'கே.ஜி.எப்.'.இதன்இரண்டாம்பாகமும்வெளியாகிமிகப்பெரியவசூல்வேட்டையை நடத்தியது. 'கே.ஜி.எப்.' படத்தின் 2 படங்களிலும் நாயகியாக நடித்து கவனம் ஈர்த்த, ஸ்ரீநிதி ஷெட்டி தமிழில் விக்ரமுடன் 'கோப்ரா' படத்திலும் நடித்திருந்தார். தற்போது நானி ஜோடியாக அவர் நடித்துள்ள 'ஹிட்3' படம் விரைவில் வெளியாக இருக்கிறது.

இதற்கிடையில் பட விழாவில் கலந்துகொண்ட ஸ்ரீநிதி ஷெட்டியிடம், 'கே.ஜி.எப்' படத்தில் யாஷ், 'கோப்ரா' படத்தில் விக்ரம், 'ஹிட்3' படத்தில் நானி என 'டான்' கதாபாத்திரங்களுக்கு ஜோடியாக நடிப்பது ஏன்? இது உங்கள் ஆசையா? என்று கேட்கப்பட்டது.

அதற்கு பதில் அளித்த ஸ்ரீநிதி ஷெட்டி, "அதுமாதிரியான கதாபாத்திரங்கள்தான் என்னை தேடி வருகிறது. அது ஏன்? என்று எனக்கும் தெரியவில்லை. ஆனால் இதுவும் ஒருமாதிரியாக நல்லாவே இருக்கிறது. 'டான்' ஆக நடிப்போருக்கு நாம் ஜோடி சேருவதுசிறப்புதானே...அந்த'டான்'நம்கைவசம்என்றுநினைக்கும்போதுமகிழ்ச்சி. அதனால் சரி போகட்டும் என்று விட்டுவிட்டேன்" என்று கலகலப்பாக பதில் அளித்தார்.

## பி.சி.ஸ்ரீராமை கொண்டாட விழா எடுக்க வேண்டும் இயக்குனர் வசந்தபாலன்




ஒளிப்பதிவாளர் பி.சி. ஸ்ரீராம் இயக்கிய 'மீரா' படத்தின் கதாசிரியரும் 'அழியாத கோலங்கள் 2' படத்தின் இயக்குநருமான எம் .ஆர் .பாரதி இயக்கத்தில் புதுமுகங்கள் ஜீவா, ஹரிஷா, பிரபு சாஸ்தா, இந்திரா மற்றும் பலர் நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'ட்ரீம் கேர்ள்'. இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய இயக்குநர் வசந்தபாலன், "மீரா படத்தில் நான் உதவி எடிட்டராக பணியாற்றினேன். அப்போது எடிட்டர் லெனின் விஜயனைப் பார்க்க அடிக்கடி பிசி ஸ்ரீராம் சார் அங்கே வருவார். அவர் ஒளிப்பதிவில் எடுக்கப்பட்ட படத்தின் காட்சிகளைப் பார்த்து எனக்கு வியப்பாக இருக்கும்.இசைஞானி இளையராஜாவுக்கு சற்றும் குறைவில்லாத பெருமைக்குரியவர் ஒளிப்பதிவு மேதை பி. சி.. ஸ்ரீராம் அவர்கள். இவர் படத்தில் இவரது ஒளிப்பதிவில்தான் நாம் அதுவரை பார்த்த சாதாரண வீடு கூட அழகாகத் தெரிந்தது. வீடு இவ்வளவு அழகாக இருக்கிறது என்று இவரது 'மௌன ராகம் 'படத்தைப் பார்த்து தான் தெரிந்து கொண்டேன் .ஒரு காட்டன் புடவையைக் கூட அழகாகக் காட்ட முடியுமா என்று நான் வியந்தேன்.

'திருடா திருடா 'படத்தின் 'தீ தீதித்திக்கும் தீ' பாடலில் நாம் இதுவரை பார்த்த எழும்பூர் மியூசியத்தைக் கூட அவ்வளவு அழகாக காட்டியிருப்பார். கமலா தியேட்டரில் அந்தப் படத்தை பார்த்தேன்.அந்தப் பாடலில் விளக்குகள் அணைந்து எரியும்போது அந்த அவரது ஒளி ஜாலத்தைப் பார்த்து திரையரங்க ரசிகர்கள் கைதட்டினார்கள். மீண்டும் பார்த்தபோது அதே காட்சியில் கைதட்டினார்கள்.வசனங்கள், நடிப்பு எல்லாவற்றையும் கடந்து ஒளிப்பதிவுக்குக் கைத்தட்டல் பெற்றவர் இந்த ஒளிப்பதிவு மேதை. அப்படி தனது ஒளிப்பதிவின் மூலம் சிறப்பு சேர்த்தவர் இங்கே வந்திருக்கிறார். இன்று இந்தியாவின் தலைசிறந்து விளங்கும் பல ஒளிப்பதிவாளர்கள் அவர் மூலம் வந்தவர்கள் .

அவர் ஒளி அமைப்பின் மூலம் கவிதை எழுதியவர்.அதன் மூலம் ஒரு மாயாஜாலம் நிகழ்த்தியவர்.ஒளியாலும் கதை சொல்ல முடியும் என்று நிரூபித்தவர் .அவரது 'குருதிப்புனல்' ,'அக்னி' நட்சத்திரம் போன்ற படங்கள் எந்த ஏஐயும் இல்லாத அந்தக் காலத்திலேயே 35 எம் எம் பிலிமில் அசத்தியவர் .'அலைபாயுதே', 'ஓகே கண்மணி', 'சீனி கம் ' வரை அவர் தனது மேதைமையான ஒளிப்பதிவைக் காட்டியவர்.பெரிய மாயாஜாலம் நிகழ்த்தியவர். இவர் தமிழ் சினிமாவால் கொண்டாடப்பட வேண்டிய ஒருவர்.சினிமா மேதைகளைக் கொண்டாடவேண்டும்.விரைவில்இவருக்கானவிழாஎடுக்கவேண்டும்என்றும்இந்தமேதைகொண்டாடப்பட வேண்டும் என்றும் இதன் மூலமாக வேண்டுகோள் விடுக்கிறேன். கவனிப்பாரற்று கிடந்த எம்ஜிஆர் திரைப்படக்கல்லூரிக்கு டிராட்ஸ்கி மருது அவர்கள் பொறுப்பேற்ற போது நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். கல்லூரிக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கும் செய்தியை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். இனி திரைப்படக் கல்லூரிக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கும் என்று நம்புகிறேன்" என தெரிவித்தார்.

இந்திய திரையுலகின் புகழ்பெற்ற ஒளிப்பதிவாளர்களில் ஒருவர் பி.சி.ஸ்ரீராம். தமிழில் பூவே பூச்சுடவா, மவுன ராகம், நாயகன், தேவர் மகன், காதல் தேசம், அலைபாயுதே உள்ளிட்ட பல படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். தெலுங்கு, இந்தி, மலையாளத்திலும் நிறைய படங்களில் பணியாற்றி இருக்கிறார். விக்ரம் நடித்த மீரா, கமல்ஹாசன் அர்ஜுன் இணைந்து நடித்த குருதிப்புனல் மற்றும் வானம் வசப்படும் ஆகிய படங்களை டைரக்டு செய்துள்ளார்.

## ஐபிஎல்:மும்பை வீரர் பும்ரா புதிய சாதனை



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் நேற்று மாலை 3.30 மணிக்கு மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நடைபெற்ற 45வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற லக்னோ அணியின் கேப்டன் ரிஷப் பண்ட் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த மும்பை அணி

20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 215 ரன்கள் எடுத்தது. அதிரடியாக விளையாடி அரைசதம் கடந்த சூர்யகுமார் யாதவ்(4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்) 28 பந்துகளில் 54 ரன்கள் குவித்தார். லக்னோ அணியில் அதிகபட்சமாக மயங்க் யாதவ் மற்றும் ஆவேஷ் கான் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

தொடர்ந்து 216 ரன்கள் என்ற சவாலான இலக்கை நோக்கி லக்னோ அணி களமிறங்கியது. 20 ஓவர்கள் முடிவில் லக்னோ அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 161 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 54 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி பெற்றது. மும்பை தரப்பில் பும்ரா அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டார்.

இந்த நிலையில், இந்த போட்டியில் 4 விக்கெட்டுகள் வீழ்த்திய பும்ரா புதிய சாதனை படைத்துள்ளார். மும்பைக்கு அணிக்காக வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவின் விக்கெட் எண்ணிக்கை 174ஆக உயர்ந்தது.

இதன் மூலம் மும்பை அணிக்காக அதிக விக்கெட் எடுத்தவரான மலிங்காவின் (170 விக்கெட்) சாதனையை தகர்த்துள்ளார் .

## ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆக்கி: இந்திய பெண்கள் அணி மீண்டும் தோல்வி



இந்திய பெண்கள் ஆக்கி அணி 5 ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாட ஆஸ்திரேலியா சென்றுள்ளது.இதில் முதல் 2 ஆட்டங்களில் ஆஸ்திரேலிய 'ஏ' அணியுடனும், அடுத்த மூன்று ஆட்டங்களில் உலக தரவரிசையில் 5வது இடத்தில் இருக்கும் ஆஸ்திரேலிய சீனியர் அணியுடனும் மோதுகிறது.

இந்திய பெண்கள் ஆக்கி அணி, ஆஸ்திரேலியா 'ஏ' அணிக்கு எதிரான தொடக்க ஆட்டத்தில் 35 என்ற கணக்கில் தோற்றிருந்தது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2வது ஆட்டம் நேற்று நடைபெற்றது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இந்தியா 23 என்ற கோல் கணக்கில் தோல்வியை தழுவியது.

அடுத்து இந்தியா ஆஸ்திரேலியா சீனியர் அணிகள் இடையே 3 ஆட்டங்கள் நடத்தப்படுகிறது. இதன் முதலாவது ஆட்டம் வருகிற 1ந் தேதி நடக்கிறது.

## ஐபிஎல்: 4 ஆயிரம் ரன்களை கடந்து சாதனை படைத்த சூர்யகுமார் யாதவ்



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் நேற்று மாலை 3.30 மணிக்கு மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நடைபெற்ற 45வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற லக்னோ அணியின் கேப்டன் ரிஷப் பண்ட் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த மும்பை அணி

20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 215 ரன்கள் எடுத்தது. அதிரடியாக விளையாடி அரைசதம் கடந்த சூர்யகுமார் யாதவ்(4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்) 28 பந்துகளில் 54 ரன்கள் குவித்தார். லக்னோ அணியில் அதிகபட்சமாக மயங்க் யாதவ் மற்றும் ஆவேஷ் கான் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

தொடர்ந்து 216 ரன்கள் என்ற சவாலான இலக்கை நோக்கி லக்னோ அணி களமிறங்கியது. 20 ஓவர்கள் முடிவில் லக்னோ அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 161 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 54 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி பெற்றது. மும்பை தரப்பில் பும்ரா அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டார்.

இந்தநிலையில், இந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வீரர் சூர்யகுமார் யாதவ் 34 ரன் எடுத்த போது ஐ.பி.எல்.ல் 4 ஆயிரம் ரன்களை (145 இன்னிங்ஸ்) கடந்தார். இதற்காக 2,714 பந்துகளை சந்தித்த சூர்யகுமார் 4 ஆயிரம் ரன்களை அதிவேகமாக எட்டிய 3வது வீரர் என்ற பெருமையை பெற்றார். முதல் இரு இடங்களில் கிறிஸ் கெய்ல் (2,658 பந்து), டிவில்லியர்ஸ் (2,658 பந்து) ஆகியோர் உள்ளனர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 12002852866
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.